**ஹப்புத்தளை பிரதேச சபை - 2022**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஹப்புத்தளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 2,659,865 பெறுமதியான 04 வேலைகளின் பெறுமதி மூலனமாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது மூலதனகமாக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் உடைத்து அகற்றப்பட்ட 04 கட்டிடங்களின் கூட்டுபெறுமதி ரூபா 843,841 கணக்குகளில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | உடைத்து அகற்றப்பட்ட அந்த கட்டிடங்களின் பெறுமதி எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு சொலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி தொகை ரூபா 3,609,161 ஆக நடைமுறையல்லா | எதிர்வரும் ஆண்டின் போது நடைமுறைப் பொறுப்புக்களுக்குரிய கடன் தொகை சரியாக கணக்கீடு செய்யப்படும். | - மேற்படி - |

பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டின் போது செலுத்துவதற்கு நிர்ணயித்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி தொகையை இனங்கண்டு நடைமுறைப் பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் தனியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மூலதன உதவி மீதி மற்றும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 997,924 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134(2) ஆம் பிரிவு | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் எதிர் காலத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட பொதுச் சபைக்கு அனுப்பி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சகல அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களிலும் ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்கும் சட்டத்தின் 2 ஆம் பந்தி | 16 உறுப்பினர்கள் மீளாய்வாண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை வழங்குமாறு உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று பெறப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,993,920 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,059,167 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 1,984,474 | 1,863,874 | 2,333,438 | (469,564) | 1,562,934 | 1,767,070 | 916,541 | 850,529 |
| (ii) | வாடகை | 5,451,610 | 4,103,916 | 5,166,888 | (1,062,972) | 2,225,640 | 3,874,454 | 2,338,613 | 1,535,841 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,102,300 | 1,232,590 | 616,934 | 615,656 | 1,154,700 | 916,370 | 915,870 | 500 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,846,950 | 18,578,895 | 8,130,228 | 10,448,667 | 15,108,200 | 15,206,632 | 10,742,803 | 4,463,829 |
| | மொத்தம் | 22,385,334 | 25,779,275 | 16,247,488 | 9,531,787 | 20,051,474 | 21,764,526 | 14,913,827 | 6,850,699 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 25,779,275 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 9,531,787 அறவிடப்படாதிருந்ததுடன், அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 36 சதவீதம் ஆகும். | தற்போது நிலுவை வருமானத்தின் அதிக அளவு அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஆ) 02 வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 14 கடைகளில் இருந்து ரூபா 100,376 நிலுவை கடை வாடகை மற்றும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 கடைகளின் வாடகை ரூபா 104,550 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணம் எதிர்காலத்தில் அறவிடப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மே 08 ஆம் திகதிய 2122/29 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட விதி இலக்கம் 01 இன் பிரகாரம் பிரதேச சபை தலைவர் சபையின் வாகனத்தை பயன்படுத்துவதாயின் மாதம் ஒன்றுக்கு எரிபொருள் 400 லீட்டருக்கு மேற்படாத அளவிற்காக சபை நிதியத்தில் இருந்து செலவினம் செய்யக்கூடியதாக இருந்த போதிலும். அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை சபைக்குரிய கெப் வண்டிக்காக அங்கீகரித்த எல்லையை விஞ்சி 1,597.8 லீட்டர் பயன்படுத்தப்பட்டிருந்தது. | கெப் வண்டி ஊவா மாகாணத்திற்கு வெளியே பிரயாணம் செய்வதற்கு மாத்திரம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட எல்லையில் எரிபொருளை பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 37,700 ஆன 03 தண்ணீர் பம்பிகள் காண்பிக்கப்பட்ட போதிலும் ,பௌதீக பரிசோதனைகளின் போது 02 தண்ணீர் பம்பிகள் பற்றாக்குறையாக காணப்பட்டது. அந்த பற்றாக்குறை தொடர்பாக பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பற்றாக்குறை பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து நட்டம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் தளபாடம் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 213,610 ஆன 06 கொடிக் கம்பங்கள், 19 அலுவலக கதிரைகள், 11 கணனி கதிரைகள் மற்றும் கையுடன் உள்ள 09 கதிரைகள் என்பன பௌதீக ரீதியில் காணப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபை 2013 முதல் 2021 வரையான காலத்தில் ஆட்சேர்த்த 11 ஊழியர்களுக்கு அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க ஊழியர் சேமலாப நிதிய அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அமைய, நாட்கூலி, தற்காலிக ஊழியர்களுக்கு அரச ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) இடம் மாற்றலாகிச் சென்ற மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதி பிணையாளர்களிடம் இருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும், 05 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 40,773 நிலுவை கடன் மீதி தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக உள்ள ஊழியர் கடன் மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |